கடைசியாக புதுப்பிக்கப்பட்டது: 10/4/2020

# நான் உன்னைக் காக்கிறேன். நீ என்னைக் காப்பாற்று.

**உங்கள் எண்ணப்போக்கை மாற்றுங்கள்.**

**“கோவிட்-19 இலிருந்து எவ்வாறு என்னைப் பாதுகாப்பது” என்பதிலிருந்து “கோவிட்-19ஐ பரவாமல் எவ்வாறுதடுப்பது”**

இவ்வாறு வைத்துக்கொள்வோம்: அறிகுறிகள் இல்லாமல் என்னை கோவிட்-19 தொற்று தாக்கியுள்ளது

இலக்கு: கோவிட்-19ஐ பரப்ப மாட்டேன்





நல்ல உணவு, நல்ல உறக்கம், மகிழ்ச்சியான மனம்.

போதுமான முகக்கவசங்கள் இல்லையா? முகக்கவசங்களை மீண்டும் உபயோகிக்கலாம். சலவை செய்யுங்கள் அல்லது கிருமிநாசினி தெளியுங்கள்.

## வைரஸ் தகவல்

இருமல், உமிழ்நீர் மற்றும் வெளிமூச்சால் வைரஸ்கள் பரவுகின்றன.
உமிழ்நீர் மற்றும் இருமல் அருகிலுள்ளோரை பாதிக்கும்.
முகக்கவசம் அணிந்தால் இதைப் பெருமளவு குறைக்கலாம்.
வெளிமூச்சால் மட்டுமே வைரஸ்கள் பரவாது.



## வசிக்கும் அறை காற்றோட்டமாக இருக்க ஜன்னலைத் திறந்து வைக்கவும்.

வாயினால் சுவாசிப்பதைத் தவிர்க்கவும். வாயினால் சுவாசித்தால் வைரஸ்கள் நுரையீரலை சென்றடையும் அபாயம் உள்ளது.



## வெளியில் இருக்கும் சமயங்களில் முகத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும்....!

கவனம்! உங்கள் கைகளில் அதிகளவில் வைரஸ்கள் படிந்திருக்கின்றன. கைகளால் முகத்தைத் தொடுவதால் வைரஸ்கள் எளிதாக கண், மூக்கு மற்றும் வாயினுள் செல்லும் அபாயம் அதிகம். கை விரல்களால் மூக்கை சுத்தம் செய்யாதீர்.

## வெளியில் இருக்கும் சமயங்களில் முகத்தைத் தொட நேர்ந்தால்.........

கைகளை நன்கு கழுவியபிறகே தொடவும். இதற்கு வசதியில்லை என்றால் கிருமிநாசினி தெளிப்பான், ஈரக் காகிதம் அல்லது ஈரக்கைக் குட்டையால் தவறாமல் கைகளை சுத்தப்படுத்தவும்.



## வெளியிலிருந்து வீட்டிற்குள் நழைந்தவுடன்........

முதலில் கைகளை நன்கு கழுவவும்.கிருமி நாசினி தெளிப்பான் கொண்டு வீட்டுக் கதவுகளின் கைப்பிடிகளை சுத்தம் செய்யவும். உடனே குளிக்கவும்.



## சகமனிதர்களை சந்திக்க நேர்ந்தால்........

சகமனிதருடன் பேசும் போது தவறாமல் முகக்கவசம் அணியவும். சகமனிதருடன் உணவு உண்ண நேர்ந்தால், உங்கள் உணவை ரசித்து உண்ணுங்கள். உண்ணும்போது பேசாதீர்கள். உண்டபிறகு முகக்கவசம் அணிந்த பிறகே பேசவும்.

குறிப்பு: http://twitter.com/takavet1 (கடைசியாக புதுப்பிக்கப்பட்டது 7/4/2020)

தகாயுகி மியாசாவா, இன்ஸ்டிடியூட் ஃபார் ஃபிரண்டியர் லைஃப் அண்ட் மெடிக்கல் சயின்ஸ்,
கியோட்டோ பல்கலைக்கழகம்

* இந்த அறிவிப்பு மாறுதல்கள் இல்லாமல் விநியோகிக்கப்படலாம் (விநியோகிக்கப்படவேண்டும்)! /
இந்த அறிவிப்பு PDF வடிவில் இங்கே பதிவேற்றப்பட்டுள்ளது: https://o202n006.wixsite.com/fiyer *

வடிவமைத்து நிர்வகிப்பவர்: ஹிரோகோ ஓகாடா / மொழிபெயர்ப்பு: பகவதி சுந்தரி & ராஜ்யஸ்ரீ சுந்தரம்